**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 09.06.2025**
**OS. No. 186/2021**
**வழக்கு சாட்சி PW.1– கேசவராஜ், த/பெ.பதிசெட்டியார்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

தாவா சொத்து எனக்கும், என் அண்ணன் சண்முகத்திற்கும் கூட்டாக பாத்தியப்பட்ட கிரைய சொத்து என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை பொறுத்து எனக்கும், என் அண்ணனுக்கும் பாகபிரிவினை எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் பட்டாவும் என் பெயரிலும், என் அண்ணன் பெயரிலும் கூட்டாக தான் உள்ளது என்றால் சரிதான். வீட்டு வரி, தண்ணீர் வரி ஆகிய அனைத்தும் என் பெயரிலும், என் அண்ணன் பெயரிலும் கூட்டாக தான் உள்ளது என்றால் சரிதான். அதுவும் நான் நீதிமன்றத்தில் என் தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்துள்ளேன். தாவா சொத்து எனக்கும், என் அண்ணனுக்கும் கூட்டாக பாத்தியப்பட்டதாலும், தற்போது வரை அந்த சொத்து பாகபிரிவினை செய்யப்படாததாலும், அந்த சொத்தை பொறுத்து எனது அண்ணனுக்கும், அண்ணனின் வாரிசுகளுக்கும் எதிராக எந்த பரிகாரமும் கோர இயலாது என்றால் சரியல்ல. என் அண்ணன் இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளான இவ்வழக்கின் பிரதிவாதிகள் தாவா சொத்தை அனுபவிக்க கூடாது என்று அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை என் அண்ணன் எனக்கு விற்பதாக தெரிவித்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் தாவா சொத்தை எந்த சமயத்திலும் எனக்கு விற்பனை செய்வதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதரவாக நான் எந்த

ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.